# நேர்மையற்ற ராஜீவை பிரதமராக்காதீர் -கருணாநிதி


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 24 ஷஃபான் 20 இதழ்: 27

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 9-3-1991


(சென்னை)
"இந்திரா காங்கிரஸ் கட்சி தலைவர் திரு. ராஜீவ்காந்தியை சேபந்து பிரதமராக நியமிக்குக் பட்சத்தில் அவரிடமிருந்து நேர்மையையோ அல்லது மனிதாபிமானத்தையோ நாட்டுமக்கள் எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறு முன்னாள் தமிழக முதலமைச்சரும் தி. மு. க.

(4-ம் பக்கம் பார்க்க)

## விமான தாக்குதலை தடுக்க 'பிரபா' அவசர உத்தரவு

(யாழ்ப்பாணம்)
இலங்கைப் படையினரின் விமானத் தாக்குதல்களிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றும்படி தமது தளபதிகளுக்கு விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் உத்தரவிட்டுள்ளாரென வெளிநாட்டு ஏஜென்சி செய்திகள்

(4-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திர கட்சியில் பாரிய மறுசீரமைப்பு

(கொழும்பு)
சுதந்திரக் கட்சியில் பாரிய மறுசீரமைப்பு வேலைகள் நடைபெற்று வருவதாக திரு. அநுரா பண்டாரநாயக்கா

(4-ம் பக்கம் பார்க்க)

## ● ஜெனிவா மாநாட்டில்

# இலங்கைக்குபலத்தகண்டனம்

# தடுக்கும் முயற்சி தோல்வி!

(ஜெனிவா)
ஜெனிவாவில் நடைபெற்ற 'மனித உரிமைகள் குழு' மாநாட்டில் இலங்கைக்கு எதிராக கண்டன தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை தடுக்க இலங்கைக்குழு பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டும் பயனளிக்கவில்லையாம்.

43 நாடுகள் கலந்து கொண்ட இம் மாநாட்டில் இலங்கை பார்வையாளராக கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தது. இக்குழு திரு. பிரட்மன் வீரக்கோன் தலைமையில் கலந்து கொண்டது.

இருவாரம் நடைபெற்ற இம்மாநாட்டில் கடந்த பல வருடங்களாக வடக்கு - கிழக்கு உட்பட நாடு முழுவதும் மனித உரிமை மிக மோசமாக மீறப்படுவதாகவும் அப்பாவிகள் கொல்லப்படுவ

(4-ம் பக்கம் பார்க்க)

## முப்படை பாதுகாப்பில் அரசு அன்னையர் பேரணி

(கொழும்பு)
ஐ. தே. கட்சியின் அன்னையர் முன்னணி நேற்று கொழும்

(4-ம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மாவட்டத்தில் கடுஞ்சண்டை தொடர்கிறது

[அம்பாறை]
அம்பாறை மாவட்டத்தில் இராணுவ முகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டுள்ளதாக நேற்றிரவு 'ஏஜென்ஸி' செய்தி ஒன்று தெரிவித்தது.

படையினருக்கு உதவியாக விமானங்களும், ஹெலிகளும் கடும் தாக்குதலில் ஈடுபட்டு வருவதாகவும் அச்செய்தி தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## காணாமல்போன மீனவர் கடற்படையால் கைது

(வடமராட்சி)
வல்வைக் கடலில் சிறிலங்கா கடற்படையினரால் கடந்த 4-ம் திகதி அதிகாலை தாக்குதலுக்குள்ளான மீன்பிடிப் படகில் இருந்து காணாமற்போன ஆதிகோவிலடியைச் சேர்ந்த 4 மீனவர்களையும் கடற்படையினர் ஏற்றிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சம்பவத்தில் ஒருவர் சடலமாகவும் ஒருவர் காயத்துடனும் கரை சேர்ந்ததும் தெரிந்ததே.

காணாமற்போனவர்கள் எனக் கருதப்படும் பொன்னம்பலம் நாகேஸ்வரன் (வயது-21), இராசலிங்கம் சத்

(4-ம் பக்கம் பார்க்க)

## விமான தள வேலை சீனன் குடாவில் துரிதம்

(திருமலை)
திருமலை சீனன்குடா விமான நிலைய அபிவிருத்தி வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை இராணுவத்தின

(4-ம் பக்கம் பார்க்க)

## 500 அரச ஊழியர் மீது லஞ்ச - ஊழல் விசாரணை

(கொழும்பு)
500க்கும் மேற்பட்ட அரச ஊழியரின் சொத்துக்கள் பற்றிய விபரம் குறித்து லஞ்ச - ஊழல்' திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

வடக்கு - கிழக்கை சேர்ந்த உயரதிகாரிகள் பலரும் இந்த விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர். இந்தவிசாரணையில் சுங்கதிணைக்கள குடிவரவு, குடியகல்வு திணைக்கள, உணவுத் திணைக்கள, கல்வித்திணைக்கள பொலிஸ் திணைக்கள அதிகாரிகள்உட்படுத்தப்படவுள்ளனர்.

மேற்கு மகாணசபை உறுப்பினர் இருவர் இவ்விசாரணைக் குட்படுத்தப்பட்டு வழக்கும் தொடரப்பட்டுள்ளது. இவர்கள் மீதான குற்றச்சாட்டை

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் சிக்கியது

(யாழ்ப்பாணம்)
மறைவிடமொன்றில் சூதாடிய கும்பலொன்றை விடுதலைப் புலிகள் நேற்று மடக்கிப் பிடித்தார்கள்.

சோண்டாவில் பகுதியில் கள்ளுத்தவறணை ஒன்றினுக்கு அருகாமையிலுள்ள மறைவிடம் ஒன்றில் நீண்டநாட்களாகச் சூதாட்டம் நடாத்தி வந்த கும்பலொன்றை விடுதலைப் புலிகள் மிகச் சாதுரியமாக மடக்கினார்கள். (வி)

## மடுவில் தாக்குதலை தொடர ராணுவம் முன்வரவில்லையாம்

(கொழும்பு)
மன்னார் மாவட்டம் மடுமாதா ஆலய சுற்றுவட்டாரப் பகுதியில் ஆரம்பமான இராணுவ நடவடிக்கை தொடர முடியாத நிலையில் கைவிடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

மடுமாதா அகதிமுகாமிலிருந்து ஆயிரக்கணக்கான அகதிகளை வெளியேற்றி அப்பகுதியில் தீவிர விமான தாக்குதலுடன் இராணுவநடவடிக்கை ஆரம்பமானது.

எனினும் அமைச்சர் ரஞ்சன் கொல்லப்பட்டதையடுத்து தமது நடவடிக்கையை கைவிட்டு இராணுவத்தினர் திரும்பிவிட்டனராம். தற்போது இதனை தொடர இராணுவம் முன்வரவில்லையாம் (சி

## கொழும்பு ஹோட்டல்களில் தமிழ் குழுக்கள் காவல்

(யாழ்ப்பாணம்)
கொழும்பிலுள்ள லொட்ஜுகளிலும், ஹோட்டல்களிலும் ஆயுதம் தாங்கிய தமிழ்க்குழுக்கள் கடும் [illegible]கின்றனை.

அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவின் கொலைக்குப் பின்னரே இவர்கள் தீவிரமாகக் காவலில் ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாண இளைஞர்களில் புலிகளுடன் தொடர்பானவர்களைக் கண்டுபிடிக்கும் முகமாக அரசினரால்

(4-ம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடித்த அந்த நேரத்தில்...

[கொழும்பு]
கொழும்பில் கடந்த சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு குண்டுவெடிப்பு ஏற்பட்டபோது அந்த சத்தத்தை மிகத் தொலைவிலிருந்து கேட்ட இந்திய சஞ்சிகையான 'இந்துஸ்தான் டைம்ஸ்' கொழும்பு நிருபர் திரு. அப்பரட் டீம் முகர்ஜி கூறுகிறார்:

[4-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

இலுப்பை அரப்புத் தேவை. தொடர்பு மில்க்வைற் யாழ்ப்பாணம். (சி-1137)

## கொம்பியூட்டர்

கொம்பியூட்டர் Programming in Basic Language. 4 மாதங்கள். ஆரம்பம்: 12-03-91. I A. B. (லண்டன்), Shorthand & Typing (பிற்மன்ஸ்) வகுப்புகள் நடைபெறுகின்றன. School of Business Administration, 3-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி-4409)

## புளொக்

புளொக் (BLOCK) புகைப்படம்- றபர் சீல்- கலர் படம்- ஓவியம் - பிறேம் போடுதல் - கலர் பிலிம் சுருள்கள் ஸ்ரிக்கேஸ் முதலியவற்றிற்கு நாடுங்கள். கொழும்பு ஸ்ரூடியோ யாழ்ப்பாணம். (சி-1134)

## விற்பனைக்கு

Letter Pad பலவர்ண டிசைன்களில் கடிதம் எழுதும் லெட்டபாட் விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றது. விலை ரூபா 14/- வியாபாரிகளுக்கு டசின் 140/- மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். விபரங்களுக்கு பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி-1131)

## ஆங்கில கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்டமுறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்புகொள்ளவும் S ஜெயராஜா C/o S. சச்சிதானந்தம், கிராமசேவை உத்தியோகத்தர் உடுவில். (உடுவில் மகளிர், பாடசாலைக்கு முன்பாக) (சி-4427)

## புத்தகம்

வளைகுடாப்போர் (போர் தந்திரங்கள்- விளைவுகள்- தாக்கங்கள்) By அ. சி. உதயகுமார் B. Sc இந்நூல் சர்வதேச அரசியல் ஆய்வுகளைமேற் கொள்ளவும், ஆய்வுகளை மேற்கொள்ள முற்படுவோருக்குப் பயன்படக்கூடிய அரிய நூல். வெளியீடு Tamil Institute of Strategic Studies விற்பனை. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (எ-1138)

## ஆண்டுவிழா போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 35-வது ஆண்டு விழாவையொட்டி கைதடியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையில் கவிதை, கட்டுரை, சிறுகதை, பொது அறிவுப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை கல்விப்பகுதி பொறுப்பாளர் க. சிறீதரன் மேற்கொண்டு வருகிறார்.

## கருத்தரங்கு

(வட்டுக்கோட்டை)

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தினர் நடாத்தும் அதிபர்கள், சங்க உத்தியோகத்தர்கள், நலன் விரும்பிகளுக்கான கருத்தரங்கு நாளை 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11-00 மணியளவில் இணுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி தலைமையில்நடைபெறவுள்ளது 139

# இராசிபலன்

09-03-1991

சனிக்கிழமை

நவமி நாள் முழுவதும். மூலம் நாள் முழுவதும். சித்த யோகம். இராகுகாலம் காலை 9-24முதல் 10-54வரை. நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் கொடி.

மேடம்: விவேகமற்ற போக்கு, குடும்பக் கஷ்டம், தொழில் பாதிப்பு பயமிகுதி.

இடபம்: அதிக யோசனை, பகைவர் தொல்லை, உடல் நிலை பாதிப்பு, செலவு.

மிதுனம்: வாழ்க்கை யோகம் அதிகாரிகள் பாராட்டு, உல்லாசப் பயணம்.

கடகம்: மனச் சந்தோசம், புதிய முதலீடு, தொழில் வாய்ப்பு. காரிய சித்தி.

சிங்கம்: மனச்சுமை. வைத்தியச் செலவு, வீண் குரோதம், காரிய தாமதம்.

கன்னி: அமைதிப்பு, ஆடம்பரச்செலவு. தொழிற்போட்டி, குடும்பச் சச்சரவு.

துலாம்: மனக்குறை, வாழ்க்கையில் புதியதிருப்பம். பெண் வழி உதவி.

விருச்சிகம்: தாய்வழிக் கவலை, பயணங்களால் துன்பம், உடல் உபாதை.

தனுசு: குடும்ப மகிழ்ச்சி, புதிய தொடர்பு, காரிய வெற்றி, வெற்றி.

மகரம்: கடன் தொல்லை, பழைய பிரச்சனைகள், அதிகார மமதை, நோய்.

கும்பம்: தொழில் பாராட்டு, சுபகாரியச் செலவு, தெய்வீக தரிசனம்.

மீனம்: குடும்பச் சச்சரவு, தொழிற் குறைவு, அநாவசியச் செலவு.

- ஜோஸ்யர்

# பருத்தித்துறை ஆஸ்பத்திரி வாட்டுகளுக்கு மின்விநியோகம் நிறுத்தம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இதுவரை நாள்தோறும் சுமார் ஒருமணி நேரம் "வாட்டுகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஜெனரேற்றர் மின்சாரம் கடந்த 22ம் திகதியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வாட்களுக்கான மின்சாரம் நிறுத்தப் பட்டமையினால் வாட்டுகளில் குளிரூட்டிப் பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ள அத்தியாவசிய மருந்து வகைகள் பழுதடையும் நிலையும் தொற்று நீக்கி நடவடிக்கைகள் பாதிப்படையும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

தற்போது ஜெனரேற்றர் மூலம் வழங்கப்பட்டுவரும் சுமார் ஒருமணி நேர மின்சாரம் சத்திரசிகிச்சை கூடம், ஆய்வுகூடம், நீர் இறைக்கும் இயந்திரப்பகுதி, வைத்திய விடுதிகளுக்கு வருகின்றன.

# தீவுப்பகுதிக்கு அம்புலன்ஸ்படகுச்சேவை

(யாழ்ப்பாணம்)

"தீவுப்பகுதியில், கடலால் சூழப்பட்டுள்ள தீவுகளில் வாழும் மக்களின் அத்தியாவசிய ஆஸ்பத்திரி தேவைகளுக்கு உதவும் வகையில் 17 லட்சம் ரூபா செலவில் 'அம்புலன்ஸ் படகு' ஒன்று செஞ்சிலுவைச் சங்கத்தினால் உருவாக்கப்பட்டுவருகிறது. இப்படகு மிக விரைவில் தீவுப்பகுதியில் சேவையிலீடுபடுத்தப்படும்.

இத்தகவலை யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் கலாநிதி ஆர். தெய்வேந்திரன் மண்டைதீவு, எழுவைதீவுக் கிராமங்களில் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் பனம் பொருள் கைப்பணிப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்ட பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். (123)

# ஆட்பதிவு திணைக்கள பணி கச்சேரிகளுக்கு மாற்றம்

(கொழும்பு)

கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்தின் பணி வருங்காலத்தில் மாவட்டக் கச்சேரிகள் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளன.

நிருவாகப் பரவலாக்கல் மூலம் அரசாங்க அதிபர்களுக்குக் கூடுதல் பொறுப்புக்களும் வழங்கப்பட உள்ளதாகவும் இதற்கான முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகப் பொது நிர்வாக மாகாண சபைகள், உள்நாட்டு விவகார அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார். (501

# மீன்பிடித்தொழில் பாதிப்பு 25 கோடி வருமானம் இழப்பு

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தஜூன் மாதத்திற்கு பின்னர் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் விவசாயம் மீன்பிடித்தொழில் என்பன மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கையால் இம் மாவட்டத்திற்கு 250 மில்லியன் ரூபா (25 கோடி) வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. என அரசாங்க அதிபர் திரு க. தருமலிங்கம் தெரிவித்தார். (150)

# நோயாளிகளை அனுமதிப்பது தற்காலிகமாக நிறுத்தம்

(மானிப்பாய்)

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர்வைத்தியசாலையில மனநோயாளர்களையும் பிரசவத்தாய்மார்களையும் தவிர ஏனைய நோயாளிகளை வார்ட்டில் அனுமதிப்பது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இது பற்றி சம்பந்தப்பட்ட ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தகவல் தருகையில் அண்மைக் காலமாக இங்குள்ள வார்ட்டுகளில்நோயாளர் தொகை அதிகரித்து வருவதால் இடநெருக்கடி ஏற்படுவதுடன் இங்குள்ள சிறிய மலசல கூடங்கள் பழுதடைந்து நிரம்பி வழிந்து துர்நாற்றமடிக்கின்றன.

இதனால் நோயாளர்கள் உட்பட வைத்தியசாலை ஊழியர்களும் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. தற்பொழுது இவற்றை திருத்தி அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இங்கிருந்த அவசர நோயாளர்கள் சிலர் சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கும் யாழ் அரசினர் வைத்தியசாலைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# பதவி வெற்றிடம்

## 1. லிகிதர்

### தகைமைகள்

கல்விப் பொதுத்தராதரம், சாதாரண சித்தி. கணிதம், தமிழ், திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். தமிழ்த் தட்டெழுத்தும் தெரிந்திருத்தல் வேண்டும்.

சம்பளத்திட்டம்: 302/3-க்கு அமைவான புதிய சம்பளத் திட்டம்.

## 2. உற்பத்தி முகாமையாளர்

### தகைமைகள்

பனை வெல்லம் பாணி தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்கள்; கல்விப் பொதுத்தராதரம் சாதாரணம். தமிழ், கணிதம், ரசாயனம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்.

சம்பளத்திட்டம்: கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழு, 107/10-வது சம்பளத் திட்டத்திற்கமைவாக புதிய சம்பளத் திட்டம். சங்க எல்லைப் பரப்பிற்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 23-03-91-க்கு முன்பாக பொதுமுகாமையாளருக்கு அனுப்பிவைக்கவும்.

★ விண்ணப்பப்பத்திரத்தை சங்கக் காரியாலயத்தில் பெற்று அவற்றையே நிரப்பிக்கொடுத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்

மானிப்பாய் பரிஷ்
தெங்கு பனம் பொருள்
உற்பத்தி விற்பனவுக்
கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்.

(ஏ 1136)

# மூன்று ஏக்கர் நிலத்தில் விவசாய உற்பத்தி

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை முள்ளி தச்சுத்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் அப்பகுதியில் தரிசாகக் கிடந்த சுமார் 3 ஏக்கர் நிலத்தில் விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு பகுதியில் தற்போது இடம் பெற்றுவரும் யுத்தத்தினால் சுமார் இருபதுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தொழிலின்றி கஷ்டப்பட்டனர். இச்சங்கத்தின் தலைவர் திரு. சந்திரன் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பயனாக தற்போது இச்சங்கம் அருகாமையிலுள்ள காணியில் உபஉணவுப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டுள்ளது.

இதனை ஊக்குவிப்பதற்கு பொது ஸ்தாபனங்கள் முன்வந்தால் இவ்வுணவு உற்பத்தியில் இவர்கள் தன்னிறைவு பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுமென்று நம்பப்படுகிறது. (71)

# ஆஸ்பத்திரி மூடப்பட்டது சம்பளமும் இல்லை

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை மூடப்பட்டதன் பின்னர் அங்கு கடமையாற்றிய சகல ஊழியர்களுக்கும் இரண்டு மாதச் சம்பளம் வழங்கப்படவில்லை. அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் தெரியவில்லை.

இவ்வைத்தியசாலை ஊழியர்கள் வெவ்வேறு இடங்களில் கடமையாற்றுகின்றனர். இதனால் அவர்கள் பல்வேறு சிரமங்களையும் அனுபவிக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலை மானிப்பாய் மெமோரியல் கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்குவதாக இருந்தது. அம்முயற்சியும் கைவிடப்பட்டுள்ளது.

ஏதாவது ஒரு பகுதியில் இவ்வைத்தியசாலை மீளவும் திறந்து செயற்படுமானால் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கமுடியும் என்றும், தங்களுக்குரியசம்பளம் வழங்காத நிலையிலும், உயரதிகாரிகளும் சரியான நடவடிக்கையை மேற்கொள்ளக் காலந்தாழ்த்தும் பட்சத்தில், அரசு தம்மைச் சிங்களப் பகுதிகளுக்குத் திடீர் இடமாற்றம் செய்யக் கூடுமெனவும் ஊழியர் அச்சம் அடைகின்றனர். (56)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டம் நாளை 10-ம் திகதி காலை 9 மணிக்குச் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

# ‘கொடுமைகளை தகர்த்திட பெண்ணினம் முன்வர வேண்டும்’

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

“பண்பாடு, பாரம்பரியம் என்ற பெயரால் ஒடுக்கப்பட்ட பெண்ணினம் தலை நிமிர்ந்து தன்னம்பிக்கையோடு சமூகக் கொடுமைகளைத் தகர்த்தெறிய முன்வரவேண்டும்” என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: “இன்றைய சமூகத்தில் பெண்கள் பல்வேறுவிதமான பிரச்சனைகளுக்கும் முகம்கொடுத்து வாழவேண்டிய நிலையிலுள்ளனர். சீதனப் பிரச்சனையால் திருமணமாகாமலே காலம் தள்ளும் கன்னியர், திருமணமாகி வேலைக்குப்போகும் பெண்களுக்கு ஏற்படும் இடர்கள். கூட்டுக் குடும்பங்களில் பெண்களின் நிலை, தற்போதைய அரசியல் சூழ்நிலைகளால் காட்டுமிராண்டித்தனமாக சித்திரவதைக்குள்ளாகும் அப்பாவிப் பெண்களின் பரிதாபம், இவர்களை வேறுபட்ட கண்ணோட்டத்துடன் பார்க்கும் சமூகத்தினர் அவ்வாறான பெண்ணினத்தை மீட்டெடுத்து நல்வழிக்கு வழிசமைக்க நாம் அனைவரும் ஒன்றுதிரளவேண்டும்”.

“பெண்கள் எழுச்சிவிழா நாளில் சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள தடைகளையும், மூடப் பழக்கவழக்கங்களையும் நீககிவிட்டுப் பெண்களின் மனவளர்ச்சி எண்ணங்கள், செயற்பாடுகள், உருவாக்கங்கள் ஆகிய அனைத்தும் குறுகிய்கோணலற்றுப் போகாதவாறு செம்மையுற்றுநோயற்றுப் பரந்து வளர நாம் பாடுபடுவோம்.

உலகின் கண் நிகழும் சுதந்திரப் போராட்டங்களில் பெண்களின் பணி பாரியளவில் காணப்படுகின்றது. அந்த வகையில் இன்று எமது தமிழீழப் பிரதேசத்தில் சிறிலங்கா அரச பயங்கரவாதத்திற்கெதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் ஆயிரம் ஆயிரமாக அணிதிரண்டு தம்மைப் பிணைத்தும் இணைத்துச் செயற்படுகின்றனர். இத்தகையதொரு போக்குத் தமிழீழப் பெண்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் உந்துதல் நிகழ்வாக அமைகின்றது என்பதே யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினது கருத்தாகும்”. (வி)

# நிதி ஒதுக்கீடு முழுவதையும் பயன்படுத்தவேண்டும்!

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தால் கட்டட நிர்மாணத்துறைக்கு கிடைக்கப்பெறும் நிதிஒதுக்கீடு முழுவதையும் யாழ் மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள் கட்டாயமாக பூரணமாக உபயோகிக்கப்பட வேண்டிய செயற் திட்டங்களை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு க. டிவகலாலா அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கட்டட நிர்மாணத்துறைக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது: கடந்த சில வருடங்களில் கட்டடநிர்மாணத்துறை விடயமாக அரசினரால் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளில் முழுவதும் உபயோகிக்கப்படாமல வருடமுடிவில் இலங்கை மின்சாரசபைக்கும், வேறு துறைகளுக்கும் மீளளிக்கப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

யாழ். மாவட்ட கட்டட கொந்தராத்துக்காரர்களிடம் பணம், தொழிலாளர், போதியளவு கட்டடத்தொழில் நுட்ப உபகரணங்கள் தேவையான அளவு இல்லாமையும் கட்டட குறைபாட்டிற்குக் காரணமாகும் என்றார் (153)

# சைக்கிள் திருட்டு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அடிக்கடி சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. 72

# பிரபல விஞ்ஞானி மரணம்

(லண்டன்)

அணுகுண்டின் தந்தை என போற்றப்படும் விஞ்ஞானி ராட்பெல்ஸி லண்டனிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் காலமானார்;

1949ம் ஆண்டு அணுகுண்டு தயாரிப்பில இவர் முக்கிய பங்கு வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் “சென்றலைற்ஸ்” விளையாட்டுக்கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்தவாரம். யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர், புதுவருட நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆர் ரவீந்திரநாதன், உப தலைவர்கள், ரி, ஆர். தர்மகுலசிங்கம், க. மகேந்திரநாதன், செயலாளர்: ஜீ. பற்குணராஜா, உபசெயலாளர்: கே. கணேசலிங்கம், பொருளாளர்; பி. சங்கர், கணக்குப்பரிசோதகர்: கே. ஈஸ்வரன். (வி)

# இலவச பாடப் புத்தகங்கள்

## பண்டத்தரிப்பில் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அலுவலகத்திலிருந்து இப்பிரிவிலுள்ள பாடசாலைகளுக்கான இலவச பாடப் புத்தகங்கள் கொத்தணி அதிபர் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை இந்தப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளாத கொத்தணிப் பாடசாலை அதிபர்கள் கூடிய விரைவில் இப்புத்தகங்களை பெற்றுச்சென்று விநியோகிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது 72

# யாழ். இந்துவில் இன்று தமிழ்த் தினவிழா

(ஆனைக்கோட்டை)

யாழ்ப்பாணம் கோட்டக் கல்விப் பிரிவினரின் தமிழ் மொழித் தின விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

பிரதம விருந்தினராக வடபிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கலந்துகொள்ளும் இவ் விழா உதவிக் கலவிப்பணிப்பாளர் திரு. தியாகராஜா தலைமையில் நடைபெறும்;

இதற்கான ஏற்பாடுகளை யாழ் கோட்டக்கல்வி அலுவலர் திரு. த. துரைசிங்கம் மேற்கொண்டுள்ளார். (139)

# முதலாண்டு வைபவம்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முதலாண்டு பூர்த்தி வைபவம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. வி. ரி. தியாகராஜா கலந்து கொண்டார்.

இவ்வைபவத்தில் மானிப்பாய் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அருணோதய பாலர் பாடசாலை பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகளும் அவர்களுக்கான பரிசளிப்பும் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்களும் திரு. சுசந்தன் இன்னாசித்தம்பியால் வழங்கப்பட்டன;

# செஞ்சிலுவைச் சங்கத்தால் குடிசைகள் கையளிப்பு

(சாவகச்சேரி)

பலாலியிலிருந்து இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து மட்டுவில் மகா வித்தியாலயத்தில்தங்கியிருந்த குடும்பங்களுக்கு மட்டுவில் மருதடிப் பிள்ளையார் கோவில் வீதியில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க ஆதரவில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். பிரிவு இருபது குடிசைகளை கையளித்துள்ளது.

தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ கு: ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் செஞ்சிலுவைச்சங்க பிரநிதித் திரு. எஸ். எல். மோகன், இவ் குடிசைகளுக்கான சான்றிதழ்களையும், சமையல் உபகரணங்களையும் உலர் உணவுப் பொருட்களையும் இருபது குடும்பங்களுக்கு கையளித்தார்.

# ஆசிரியர் பற்றுக்குறை மாணவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி நவபுரம் எருதிடல் பாடசாலையில் ஆசிரியர் பற்றுக் குறையினால் மாணவர்கள் கல்வி கற்கமுடியாத நிலையில் உள்ளனர்,

இப் பாடசாலையில் அதிபர் ஒருவரும், உதவி ஆசிரியை ஒருவரும் கடமையாற்றிவருகின்றபோதிலும் இவர்களில் ஒருவர் பாடசாலைக்கு சமூகமளிக்காவிட்டால் பாடசாலையை நடத்துவது சிரமமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலைக்கு அண்மையில் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டு திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்;

இதுதொடர்பாக பாடசாலை அபிவிருத்திச்சங்கம் உட்பட இங்குள்ள பொது நிறுவனங்கள் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது;

# உலர்உணவு விநியோக மோசடி கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படும் உலர் உணவு வகைகளின் நிறை குறைவாக வழங்கி மோசடி செய்த வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த இரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ் உள்நாட்டு வர்த்தகத் திணைக்கள அளவைகள் நிறுவைகள் அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டதாக அளவைகள் நிறுவைகள் பகுதியினர் அறிவித்துள்ளனர்;

இன்றைய இக்கட்டான காலத்திலே பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச உலர் உணவு வகைகள் சரியான நிறைப்படி வழங்கப்படுகின்றதா எனக் கண்காணிக்கும் பொருட்டு யாழ். உள்நாட்டு வர்த்தகத் திணைக்கள அளவைகள், நிறுவைகள் பரிசோதகர் திரு, கே, ஜே றூபேந்திரன் தலைமையிலான குழுவொன்று திடீர் நடவடிக்கையில் ஈடுபட்டது,

உடுப்பிட்டிப் ப. நோ. கூ. சங்கப் பகுதியிலும் புலோலி ப நோ. கூ. சங்க பகுதியிலும் இந்த உலர் உணவுப் பொருட்கள் நிறை குறைவாக வழங்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது,

# 9 மாதங்களாக பூசைகள் இல்லை

(மாங்குளம்)

மாங்குளம் சித்தி விநாயகர் ஆலயம் கடந்த ஜூன் மாதம் முதல் பூசைகள், வழிபாடுகள் இன்றிக் காணப்படுகிறது.

அப்பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் கடந்த எட்டு மாதங்களாக ஆலயச் சூழல் காடுகளால் மண்டிக் காணப்படுகிறது. ஆலயமும் பலத்த சேதம் அடைந்த நிலையில் காணப்படுகிறது. (150)

# ஆறு இந்திய மீனவர் கடற்படையால் கைது

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையினரால் ஆறு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு எரிபொருள் கடத்தி வந்த பொழுதே இந்த அறுவரும் கைது செய்யப்பட்டதாக சிறிலங்கா கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த ஆறு மீனவரும் கடற்படையினரால் தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்;

# இந்தியாவில் உடனடி தேர்தலுக்கு தயார்

## தேர்தல் ஆணையாளர்

(புதுடில்லி)

இந்தியாவில் உடனடியாக ஒருதேர்தல் வந்தாலும் அதற்கு ‘தேர்தல் கமிஷன்’ தயாராயிருப்பதாக தலைமை தேர்தல் கமிஷனர் திரு. ஷேசன் தெரிவித்துள்ளார்;

மாநில சட்டசபை தேர்தல்களை நடாத்தவும் தாம் தயாராயிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த பொதுத் தேர்தலுக்கானதொருநிலையிலேயே தேர்தல் கமிஷன் கடந்தசிலவாரங்களாக ஏற்பாடுகளை மேற்கொண்டுவருவதாகவும் அவர் கூறினார். (சி)

# சுகாதார ஊழியர்களுக்கு சீருடைகள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

யாழ் சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த 1990ம் வருடத்திற்கான உத்தியோக பூர்வ சீருடைகள் யாழ் பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகத்தினால் இவ்வாரம் தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றது;

தாதிகள், மருத்துவ மாதர்கள், மருத்துவ கலவையாளர்கள், பரிசாரகர்கள், சுகாதார தொழிலாளர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகிய பல்வேறு தரங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கான உத்தியோக பூர்வ சீருடைகள் இவ்வாறு வழங்கப்பட்டு வருகின்றன. (72)

## பாலஸ்தீனிய' தாயகத்திலிருந்து
# இஸ்ரேல்வெளியேறவேண்டும்
### - அதிபர் புஷ் உரை -

(வாஷிங்டன்)

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களிலிருந்து 'இஸ்ரேல்' வெளியேற வேண்டிய காலம் வந்துவிட்டதாக அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

மேற்கு ஆசிய பிரச்சினைக்கு விரைவில் சமாதான தீர்வு காண சகல தரப்பும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் உலக நாடுகளில் ஆக்கிரமிப்பை ஒழிக்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என்றும் கூறினார்.

அதிபர் புஷ்ஷின் இந்த கருத்து இஸ்ரேலில் பெரும் அதிருப்தியையும் கண்டனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து அமெரிக்காவுடன் விரைவில் பேச்சுக்கள் நடாத்தப்போவதாகவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இதற்கிடையில் மேற்காசியாவில் 'பலஸ்தீனியப்' பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக முக்கிய பேச்சுக்களை நடாத்த அப் பிராந்தியத்திற்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு ஜேம்ஸ் பேக்கர் சென்றுள்ளார். (கி)

### கொழும்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வருபவர்கள் தெரிவித்துள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டவர்களில் 500க்கும் மேற்பட்ட தமிழர்கள் விடுவிக்கப்பட்டுமுள்ளனராம். (56)

### 15ம் திகதி முதல்
# 2ம் கட்ட இலவச உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டுக்கான 2ம் கட்ட இலவச உலர் உணவு விநியோகம் இம்மாதம் 15ந் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டத்தில் மேற்கண்டமுடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (53)

### வீரமரணம்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்குமிடையில் நேற்றுப் பிற்பகல் 2மணியளவில் தச்சன் காட்டுச்சந்தியில் நடைபெற்ற கடும்மோதலில் இருபோராளிகள் வீரமரணமடைந்தனர்.

முருகேசு யோகராசா [மெஜலி, இயக்கச்சி], தம்பிராசா தவேஸ்வரன் (சாளி, மட்டக்களப்பு) ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தவர்களாவர். விடுதலைப் புலிகள் இவர்களுக்குத் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். [க - வி]

### சீமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனத்திலுள்ள சகல ஊழியர்களினதும் சம்பளம் தற்போது தற்காலிகமாக யாழ். நாவலர் வீதியில் இயங்கிவரும் காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனக் காரியாலயத்தில் இம்மாதம் 11-ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

### காணாமல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தியசீலன் (வயது-21), சிவப்பிரகாசம் இளங்கோ (வயது-22), குட்டி (வயது-20) ஆகியோரைக் கடற்படையினர் ஏற்றிச் சென்றனராம். (51)

### நேர்மையற்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான திரு. மு. கருணாநிதி நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

திரு. ராஜீவ்காந்தியை பிரதமராக நியமிக்கும் எந்த ஆலோசனையையும் தாம் வன்மையாக எதிர்க்கப்போவதாகவும் திரு கருணாநிதி கூறுள்ளார்.

இதுவிடயமாக ஜனாதிபதி வெங்கட்ராமனுக்கு ஏற்கனவே இவர்கோரிக்கை விடுத்திருந்ததும் இங்குகுறிப்பிடத்தக்கது.

### குண்டு வெடித்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சத்தத்தைக் கேட்ட உடனேயே தாம் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் சிறிவர்த்தனவை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டபோது, "அவர் நாட்டிலில்லை என பதிலளிக்கப்பட்டதாம். உடனே தாம் ஹவலக் வீதியிலுள்ள அமைச்சர் ரஞ்சனின் வீட்டுக்கு தொலைபேசியை எடுத்தபோது அமைச்சரின் தொலைபேசியில் 'றெக்கோடரில்' பதிவுசெய்யப்பட்ட குரல் ஒன்று "அமைச்சர் வீட்டிலில்லை, ஏதாவது செய்தியிருந்தால் கூறவும்". உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் கூறவும் அமைச்சர் வந்ததும் உங்களுடன் தொடர்புகொள்வார் என்றதாம்.

ஆனால் அடுத்த அரைமணி நேரத்தில் அமைச்சர் கொல்லப்பட்ட செய்தி தமக்கு கிடைத்துவிட்டதாக அவர் கூறினார்.

இந்த வேளை அமைச்சர் ரஞ்சன் கடந்த வெள்ளி (2ம் திகதி) நள்ளிரவு 2 மணிக்கு தமது ஒரே மகனையும் அவர் பனைவியையும் அமெரிக்கா செல்ல கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வழியனுப்பிவைத்தாராம். [சி]

## மரண அறிவித்தல்

### நாகமணி சிவக்கொழுந்து ஆசாரி

உடுப்பிட்டி - போக்காலையைச் சேர்ந்த நாகமணி சிவக்கொழுந்து ஆசாரி அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் இராசமணியின் அன்புக்கணவரும், சந்திராதேவி, மனோகரன், மகேந்திரன் (ஜேர்மன்) சிவபாலன் (ஜேர்மன்), சிவமணி (இத்தாலி], புவனேந்திரன், ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவம், குமுதினி, பாஸ்கர நாராயணன், சத்தியதேவி, ஆகியோரின் அன்பு மாமனாரும், துளசிராம், பிரியராம், சத்தியராம் கஜானி, பிரசாந், பகீரதம், தமயந்தி, சோமதி ஆகியோரின் அன்புப்பேரனும் முருகேசுவின் அருமைத் தம்பியும், வள்ளியம்மாவின் அன்பு மைத்துனரும், கண்ணகைஅம்மா. நவரத்தினராஜா, அன்னபூபதி ஆகியோரின் சிறியதந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று அன்னாரின் இல்லத்தில் பி. ப. 2 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
பிள்ளைகள்

உடுப்பிட்டி. (கி-4436)

### பொன்னையா விசுவநாதர்
(குருக்கள்)

மிருசுவில் வடக்கை வசிப்பிடமாகக்கொண்ட பொன்னையா விசுவநாதர் (08-03-91) நேற்று நீர்வேலி வடக்கில் காலமானார் அன்னார் காலஞ்சென்ற காமாட்சியின் அன்புக்கணவரும், சிவசம்புநாதன் (மிருசுவில்), பூலோகநாயகி (மட்டுவில்), சிவயோகநாதன் (நீர்வேலி - எழுதுவினைஞர், கட்டிடத் திணைக்களம்-யாழ்ப்பாணம்), சிவசரணநாதன் (கைதடி - கிராமசேவை அலுவலர், புதுமுறிப்பு - கிளிநொச்சி), காலஞ்சென்ற சிவகணநாதன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும், அரியமலர், சுந்தையா, அருந்தவமலர், சிவானந்ததேவி (ஆசிரியை, குருசாமி வித்தியாலயம் - கைதடி), ஆகியோரின் அன்பு மாமனாரும், விஸ்வரூபன், சாந்தரூபி, சிவரூபன், குணரூபி, விஜயவரன், சாந்தரூபன், கோயினி, சுதர்சினி, திருமாறன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நாகமுத்து கணபதிப்பிள்ளை (மிருசுவில்), காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (மிருசுவில்), திரு. கனகசபை (மிருசுவில்), திருமதி செல்லம்மா பொன்னையா (நீர்வேலி) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார். அன்னாரின் சமக்கிரியைகள் இன்று (09-03-91) சனிக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 10 மணிக்கு நீர்வேலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

"இராமால் வளவு" தகவல்:
நீர்வேலி வடக்கு, வி. சிவயோகநாதன்
நீர்வேலி. (சி 4434)

## வரதராஜ பெருமாளுடன் ராஜீவ் பிரதிநிதி சந்திப்பு

(புதுடில்லி)

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாளைக் கடந்த வாரம் திரு. ராஜீவ் காந்தியின் விசேடப் பிரதிநிதி ஒருவர் சந்தித்துள்ளார்.

லக்ஷதீவுகளில் கடந்த 11 மாதங்களாக இருந்துவந்த திரு பெருமாள் அண்மையில் இந்திய மத்திய பிரதேசத்தில் இ. காங்கிரஸ் முக்கிய பிரமுகர் ஒருவரின் இல்லத்தில் குடும்பத்துடன் தங்கியுள்ளார்.

புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் சந்திரசேகரை வற்புறுத்தி வந்த திரு ராஜீவ் காந்தி திரு. பெருமாளைத் தம்முடன் வைத்திருப்பதற்குத் தமிழகப் பத்திரிகைகள் பல கண்டனம் தெரிவித்திருந்தன. (சி)

### முப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பில் பெரும் ஊர்வலம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

ஜே.வி.பி யினராலும் தீவிரவாத நடவடிக்கைளாலும் கொல்லப்பட்டவர்களுக்கு ஆதரவாகவே இந்த ஊர்வலம் நடாத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பெருமளவிலான முப்படையினரும் இந்த ஊர்வலத்தின் போது கொழும்புநகர் முழுவதிலும் காவல் கடமையிலீடுபட்டிருந்தனர். (சி)

### 500 அரச ஊழியர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பொதுமக்களும் சம்பந்தபட்ட திணைக்களங்களும் தெரிவித்திருந்தன. (கி)

### ஜெனிவா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் அறிக்கைகள்சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை தடுக்க இலங்கை பிரதிநிதிகள் குழு பலத்த முயற்சிகளை மேற்கொண்டதாகவும் எனினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [கி]

### விமான தாக்குதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களைவிட தற்போது நடாத்தப்படும் விமானத் தாக்குதல்கள் பொதுமக்களைக் குறிவைத்தே நடாத்தப்படுவதாகவும், ஆகவே இதிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு தேவையான அத்தியாவசிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கும்படியும் திரு. பிரபாகரன் தனது 'கமாண்டோ'ப் பிரிவுக்கு அவசர உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக மேற்படி செய்திகள் நேற்று தெரிவித்தன. [வி]

### சீனன் குடா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரின் பாவனைக்காக இயங்கிவரும் மேற்படி விமான நிலையம் தற்போது நடைபெற்று வரும் அபிவிருத்தி வேலைகள் முடிவடைந்தால், வெளிநாட்டு பாரிய விமானங்கள் இங்கு இறங்கி செல்லக்கூடியதாக இருக்கும் எனவும் கூறப்படுகிறது. (வி)

### அம்பாறை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வித்தது:

இராணுவ தரப்பில் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் புலிகளுக்கும் சேதம் ஏற்பட்டிருக்கலாமெனவும் அச்செய்தி தெரிவித்தது. பல மணி நேரமாக இம்மோதல் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல்கிழக்கில் புலிகள் நல்ல பலமாக இருக்கிறார்கள் என்பதையே காட்டுவதாகவும் அச்செய்தி தெரிவித்தது. (சி)

### சுதந்திரக்கட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 18ம் திகதி முதல் யூன் மாதம் முதல் வாரம் வரை இந்த வேலைகள் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விரைவில் தேர்தல் நடைபெறலாமென்றும் அதற்கு இந்த மறுசீரமைப்பு உதவுமென்றும் கட்சி பிரமுகர் தெரிவித்துள்ளார். (கி)

## அறிவித்தல்

### நாயன்மார்கட்டு
### முறிவு நெரிவு வைத்தியசாலை

மேற்படி வைத்தியசாலை மீதி 26 வருடங்கள் வழக்கு நடந்து இறுதியாக யாழ். மாவட்ட மன்றில் 5189 இலக்க உறுதியின் 13-ம் விதியின்படி மீண்டும் பரம்பரையிடம் ஒப்படைத்தது. ஆகையினால் இவ்வைத்தியசாலைக்கு நான் உறுதிச்சாதனம் 84/138 படியும், 5-12-84 ம் TR 55 வழக்கில் கிடைத்த இறுதிக் கட்டளையின்படியும் பிரதான மனேஜராகவும், தர்மகர்த்தாவாகவும் வெ. மயில்வாகனம் பண்டிதரின் பீட்டன் என்ற முறையில் சொந்தக்காரனாகவும் உள்ளேன். ஆகையினால் எனது குடும்பத்தைச் சாராத திலகவதி கோபாலரத்தினமோ, வேறு எவருமோ வைத்தியசாலை சம்பந்தமாக பிரத்தியேக உரிமைகோர முடியாது இவர்கள் பற்றி பொதுமக்களும் மற்றும் பலரும் எச்சரிக்கையாக இருக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

இங்ஙனம்
உண்மையுள்ள
ஏ. உமாகாந்தன்

முறிவு நெரிவு வைத்தியரும்
பிரதான மனேஜரும், தர்மகர்த்தாவும்,
(சி4435) உரிமையாளரும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 16-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மார்ச் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.